தொழில், விஞ்ஞான ஆராய்ச்சி நிறுவனத்திற்கு நிலம் ஒதுக்கீடு

* 321 வினு—திரு. என். டென்னிஸ்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழில் விஞ்ஞான ஆராய்ச்சி நிறுவனத்திற்கு கூடுவாஞ்சேரியில் பெரும் பரப்பளவுள்ள நிலத்தைக் குறைந்த வாடகைக்கு ஒதுக்கும் செயற்குறிப்பு எதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆமெனில், அது பற்றிய விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: ஒரு ஹெக்டேர் நிலத்திற்கு வருடம் ஒன்றிற்கு பெயரளவு வாடகையாக ரூபாய் பத்து வீதம் செங்கற்பட்டு மாவட்டம் கூடலூர் ஒதுக்கக்காட்டுப் பகுதியில் உள்ள சுமார் ஒரு சதுர மைல் பரப்பளவுள்ள காட்டு நிலங்களை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்துவதற்கு சென்னை தொழில் விஞ்ஞான ஆராய்ச்சி நிறுவனத்திற்கு வழக்கமான நிபந்தனைகளின் கீழ் தற்சமயம் ஐந்து ஆண்டு காலத்திற்கு குத்தகைக்கு விடுவதற்கு 1972-ம் வருடம் ஏப்ரல் மாதத்தில் இந்த அரசு முடிவு செய்தது.

Thiru N. DENNIS: May I know the details of research that will be conducted by this Association?

The Hon. Thiru S. MADHAVAN: 'Automative Test Track' என்ற ஒன்றை அமைத்து கார்களுக்கு அந்த வசதி கொடுக்க முயற்சியெடுக்கிறார்கள் என்ற செய்திதான் இருக்கிறது.

திரு. ஆ. பார்த்தாமன்: தலைவரவர்களே, கூடுவாஞ்சேரியில் அமைக்கப்பட்டிருக்கும் அந்த இடத்திற்கு வெளிநாட்டு வல்லுநர்களின் உதவி கிடைக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அதனுடைய திட்டங்களெல்லாம், டெல்லியிலே சி.எஸ்.ஐ.ஆர். அவர்களுடைய அனுமதியைப் பெற்று நாம் ஒப்புக்கொள்ளலாம் என்று நினைக்கிறோம். அதற்குப் பிறகுதான் அதனுடைய விவரங்கள் தெரியும்.

Co-operative Tea Factories

* 322 Q.—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there is any proposal under the consideration of the Government to set up more tea factories under the Co-operative sector in this State: and

(b) if so, the details thereof?